# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 35
விலை 20/=

மார்கழி இதழ்-2016, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 35
E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532

ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள் (தி.பா 100 : 1)

## Merry Christmas



## ஆயரின் செய்தி

கிறிஸ்துவில் அன்பான வாசகர்களே!

டிசம்பர் மாதம் பல எதிர்பார்ப்புகள் நிறைந்த மாதமாக அமைந்துள்ளது. ஆன்மீக ரீதியில் திருவருகைக் காலம் எம்மை கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ள வகையில் கொண்டாட ஆயத்தம் செய்கிறது. டிசம்பர் 2ம் திகதி திருவருகைக் கால ஜெபவழிபாடு மறை மாவட்ட ரீதியில் இறையிரக்கத் திருத்தலத்தில் நடை பெற்றது. அதேபோல இக்காலத்தில் வழிபாடுகள், மறையுரைகள் குடும்பசெபம் என பல ஆன்மீக ஆயத்தங்கள் நடை பெறுகின்றன.

இதுபோன்ற ஆயத்தங்களோடு எதிர்வரும் ஆண்டை (2017) அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற ஒக்டோபர் நவம்பர் மாதங்களில் இரு ஆயத்த கருத்தரங்குகளும் மறைமாவட்ட மேய்ப்புப் பணிப் பேரவையும் நடைபெற்றன. இதன் விளைவாக 2017ம் ஆண்டிற்கு மூன்று முக்கிய தலைப்புக்களை நாம் தீர்மானித்துள்ளோம். இத்தலைப்புகளுக்கேற்ப குருக்கள் நியமிக்கப்பட்டு பணிகளும் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. பொதுக் கருப்பொருள்: **'நற்செய்தி: அவர் பணியும் நம் வாழ்வும்'**

1. **தூய யோசப் வாஸ் ஆண்டு**
   அருட்தந்தை எஸ். ஆர். ஜெயரெட்ணம்
   அருட்தந்தை எஸ். மதுராங்கன் குரூஸ்.
2. **தூய மத்தேயு நற்செய்தி ஆண்டு**
   அருட்தந்தை பி. போல் றொபின்சன்.
3. **குடும்ப அப்போஸ்தலத்துவம்**
   அருட்தந்தை எச்.யூட் ஜோன்சன்.

தூய யோசப்வாஸ் ஆண்டு இலங்கை ஆயர் மன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது. இதற்கான மேய்ப்புப்பணித் திருமடலும் ஆயர் மன்றத்தால் வெளியிடப்படும். மேலும் மூன்று தலைப்புகள் பற்றிய விடயங்களை எவ்வாறு மக்களுக்கு எடுத்துச் செல்வது பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டது. குடும்பங்கள், மாணவர்கள், மறைக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், பங்கு, கத்தோலிக்க நிறுவனங்கள் என பல நிலைகளிலும் உள்ளோரைச் சென்றடைய திருமலைதீபம், அலையோசை, Holy Mary தொலைக்காட்சி, மறைக்கல்வி வகுப்புகள், மறையுரைகள், வழிபாடுகள், தியானங்கள், ஞானஒடுக்கம், கருத்தரங்குகள் என பல வழிகளையும் பயன்படுத்த தீர்மானித்துள்ளோம். விசேடமாக இம் மூன்று தலைப்புகளையும் மையமாகக் கொண்டு பல விடயங்களையும் தாங்கியவாறு திருமலைத்தீபம் பத்திரிகை மேலும் நான்கு பக்கங்களைக் கொண்டதாக ஜனவரி மாதம் முதல் வெளிவரவுள்ளது. வருட இறுதியில் நடைபெறும் மறைக்கல்வி எழுத்துப் பரீட்சைக்கும் இப் பகுதிகளிலிருந்து கேள்விகள் கொடுக்கப்படும்.

2017ம் ஆண்டிற்கான எமது முயற்சிகள் அனைத்தும் பயனளிக்க உங்கள் அனைவரின் முழுமையான ஒத்துழைப்பை நாடிநிற்கிறேன்.

2016ம் ஆண்டு நிறைவடைகிறது. இவ்வாண்டில் நாம் மேற்கொண்ட தீர்மானங்களையும் மறந்து விடக்கூடாது.

1. **இரக்கத்தின் ஆண்டு:** ~ இச் சிறப்பு ஆண்டு நவம்பர் 20ம் திகதி நிறைவுக்கு வந்தாலும் இரக்கச் செயல்களை நாம் எப்போதும் தொடர வேண்டும்.
2. **மந்தையின் வாடையைஅறிதல்:** இல்லத் தரிசிப்பும் ஒருபோதும் நிறைவுக்கு வருவதில்லை. தொடர வேண்டும்.
3. **சிறியகிறிஸ்தவ குழுமங்களை உருவாக்குதல்:** இப்பணியும் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

நவம்பர் மாதம் 20ம் திகதி மூதூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டு பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த இரண்டு துறவிகள் பங்குப் பணியை ஏற்றார்கள். விரைவில் ஒரு தியாக்கோனும் இவர்களோடு இணைந்து கொள்வார். இவர்கள் பொறுப்பேற்பது மூதூர் பிரதேசத்திற்கான பணி ஆகும். இவர்கள் ஆன்மீகம், கல்வி, சமூகப்பணியில் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுத்து பணிசிறக்க இறைவனிடம் செபிப்போம்.

நவம்பர் மாதம் 21 தொடக்கம் டிசம்பர் 4 வரை நீர்கொழும்பில் ஆசிய ஆயர் மன்றங்களின் பேரவை நடைபெற்றது. இதற்கு 40 நாடுகளிலிருந்து கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள் பொதுநிலையினர் என 137 பேர் பங்குபற்றினார்கள். புதிய நற்செய்தி அறிவிப்புக்கென குடும்பங்களின் செயல்பாடுகள் இக்கூட்டத்தின் கருப்பொருளாக அமைந்திருந்தது.

இவ்வருடம் முழுவதும் எமது மறைமாவட்டம் பல சவால்களுக்கு முகம் கொடுத்தது. இறைவனில் எமது நம்பிக்கை வீண்போகவில்லை. அதே நம்பிக்கையோடும் புத்துயிர் பெற்ற உற்சாகத்துடனும் புதிய ஆண்டினுள் நுழைவோம்.

மறைமாவட்டத்தின் ஆன்மீகத்தைக் கட்டியெழுப்புவதில் ஒன்றுபட்டு உறுதியாக செயல்படுவோம். எமது ஆன்மீகத்திற்கும் (அருட்சாதனங்கள், திருப்பலி, செபம்) எமது அன்றாட வாழ்விற்கும் எப்போதும் தொடர்பிருக்க வேண்டும்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்புப் பெரு விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இயேசுவின் மனிதாவதாரம் அன்று மட்டுமல்ல இன்றும் எம் மூலம் நாளாந்தம் நடைபெற வேண்டும். அப்போதுதான் இயேசுவின் பிறப்பிற்கு நாம் முழு அர்த்தம் கொடுக்கமுடியும். இக் காலத்தில் எமது மகிழ்ச்சியோடு அடுத்தவரையும் மகிழ்ச்சிப்படுத்த நாம் முயலுவோம்.

**குழந்தை இயேசுவின் ஆசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.**

**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**




## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

**இடம் : தூய மரியாள் பேராலயம்**
**காலம் : 07 ஜனவரி 2017 (சனிக்கிழமை)**
**நேரம் : மதியம் 12 மணிமுதல் இரவு 12 மணி வரை**



**திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக செபத்தில் இணைந்திடுவோம்.**



வாசகர்கள், அன்பர்கள் , வாடிக்கையாளர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் திருமலைத் தீபத்தின்
**நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்.**

நேர்மையாளர் ஆண்டவரில் அகமகிழ்வர் (தி.பா 64:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

வருடத்தின் இறுதி மாதம் வருடத்தின் இறுதி மாதப் பத்திரிக்கை இந்த இறுதி மாதத்திலே உங்களோடு பேச கிடைத்த வாய்ப்பை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இம் மாதத்திலே எட்டாம் திகதி தூய கன்னி மரியாளின் அமல உற்பவப் பெரு விழாவைக் கொண்டாடுகின்றோம். மார்கழி இருபத்தைந்தில் இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றோம். எல்லோருக்கும் எமது வாழ்த்துக்கள். மேலும் இம் மாதம் 30ம் திகதி திருக்குடும்பத் திரு விழாவையும் கொண்டாடுகின்றோம்.

இம்மாதம் ஒன்பதாம் திகதி நமது முன்னைநாள் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தனது பிறந்த நாளையும் கொண்டாடி 20ம் திகதி தமது குருத்துவ நாளையும் நினைவு கூருகிறார். ஆயரை இறைவன் தொடர்ந்தும் ஆசீர்வதித்து காக்க வேண்டுமென்று மன்றாடுவோம்.

இம்மாதம் 25ம் திகதி நமது மறைமாநில ஆயர் மேதகு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார். ஆண்டகை அவர்களுக்கு எமது நல் வாழ்த்துக்கள்.

இம்மாதத்திலே நமது மண்ணிலே பணியாற்றி மறைந்து போன ஆயர் L.R. அன்டனி ஆண்டகை, அருட்தந்தையர்கள் ஜோசப் டிக்கோனி பிளசிடஸ்ஸில்வா, R.S.அலெக்ஸ்சாந்தர், ஹென்றிப் பொன்னையா இவர்களையும் நினைவு கூர்ந்து அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனிடம் வேண்டி நிற்போம்.

இம்மாதம் 20ம் திகதி சர்வதேச சிறுவர் உரிமைகள் தினமாகும் இக்காலத்திலே சிறுவர்கள் காண்கின்ற அவலங்கள் கண்ணீர்கள் வேதனைகள் கொடுமைகள் எனச் சொல்லிக்கொண்டே போகலாம் இக் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளிகள் வைக்கப்பட்டு அவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிகள் சமைக்கப்படுவதே இக்காலத்தில் கட்டாயத் தேவையாக உள்ளது. உரியவர்கள் இதில் தங்கள் முழுமையான பங்களிப்பைக் காட்ட வேண்டுகிறோம்.

நாட்டின் அரசியலை நோக்கும் போது மிகவும் வேதனையாக உள்ளது. பதவியை பற்றிப்பிடிப்பதற்காக பேசப்படும் வார்த்தைகள் நடந்துகொள்ளும் முறைகள் இவைகளை அவர்கள் மாற்றாது விட்டால் எதிர்காலத்தில் அவர்களின் இடங்கள் வெற்றிடங்களாகுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவர்களை சிந்தித்து செயல்பட வேண்டுகிறோம்.

மாதத்தின் இறுதி மாதம் மறை மாநிலத்தின் புதிய வருடத்தின் திட்டங்களாக பிறக்கவிருக்கின்ற ஆண்டானது தூய யோசேப்வாஸ் ஆண்டாக பிரகடனப்பட்டுள்ளதோடு புதிய ஆண்டிலே தூய மத்தேயு நற்செய்தியை உள்ளடக்கிய பல விடயங்கள் வெளியாக உள்ள வேளையில் குடும்ப அப்போஸ்தலிக்கம் பற்றிய பல நிலைகளும் பிறக்க உள்ள புதிய ஆண்டிலே செயல்வடிவம் பெற உள்ளன.

# ஆசிய ஆயர் பேரவையின் 11வது அமர்வு

ஆசிய ஆயர் பேரவையின் 11வது அமர்வானது நீர்கொழும்பிலுள்ள போலவலானை தூய பெனடிக்ட் கலாச்சார நிலையத்தில் கார்த்திகை 28 தொடக்கம் மார்கழி 4ம் திகதி வரை நடைபெற்றது. இம் அமர்வுக்கு திருத்தந்தை அவர்களின் திருப்பீடப் பிரதிநிதியாக பொறுப்பேற்றுள்ள இந்தியாவின் நாஞ்சி மறைமாவட்ட ஆயர் அதி மேதகு டெலஸ்மேடா கர்தினால் பிளவிடஸ் டொப்யே ஆண்டகை தலைமையில் கருதினால்கள், ஆயர்கள், பிரதிநிதிகள், என்று 143 பேர் கலந்து கொண்டனர். இம் அமர்வின் மையப்பொருளாக **'ஆசிய கத்தோலிக்க குடும்பம் ஜனநாயகத் திருச்சபையின் ஏழைகள்'** என்ற தொனிப் பொருளில் இம்மமவர்வானது நடைபெற்றது. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

8ம் பக்கத்தில் புகைப்படம்

# இயேசுவோடு 12 மணிநேரம் நற்கருணை ஆராதனை

- 2016 தவக்காலத்தில் 24 மணிநேர நற்கருணை ஆராதனையைத் தொடர்ந்து 2017ம் ஆண்டும் 12 மணிநேர ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- இவ் ஆராதனை மாதம் ஒரு பங்கில் மட்டும் நடைபெறுவதற்கேற்றவாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இது முழுமையாக அமைதியில் செய்யவேண்டிய ஆராதனை.
- ஆராதனையின் போது குருக்கள் ஒப்புரவு அருட்சாதனம் தர ஆயத்தமாக இருப்பார்கள். ஒரு பங்கில் இவ் ஆராதனை நடைபெறும் போது:

1. மறைமாவட்டம் முழுவதும் அதே நேர செப உணர்வோடு இணைந்திருக்க வேண்டும்.
2. ஏனைய பங்குகளிலிருந்தும் இறைமக்கள் ஆராதனை நடைபெறும் குறிப்பிட்ட ஆலயத்திற்கு வந்து ஆராதனையில் இணைந்துகொள்வது வரவேற்கத்தக்கது.
3. ஏனைய பங்குகளிலும் இதுபோன்ற ஆராதனை குறிப்பிட்ட சில மணிநேரத்திற்காவது ஒழுங்குசெய்து நற்கருணை ஆராதனையில் விசுவாசிகள் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது.
4. பங்குகளிலோ, மறைமாவட்டமாகவோ வேறு நிகழ்ச்சிகளைத் தவிர்த்துக்கொள்வது நல்லது.

- ஒவ்வொரு மாதமும் எப்பங்கிலே ஆராதனை நடைபெறும் என்பதை திருமலைத்தீபம், விவிலியநாட்காட்டி, திருவழிபாட்டு நாட்காட்டி மூலம் அறியத் தருவோம்.
- மார்ச் மாதம் மட்டும் 2016ல் நடைபெற்றதுபோல எல்லா பங்குகளிலும் 24 மணிநேர நற்கருணை ஆராதனை 24, 25 ம் திகதிகளில் நடைபெறும்.
- மறைமாவட்டம் முழுவதும் செபத்திலும் ஆன்மீகத்திலும் ஒன்றித்திருக்கவும் ஆன்மீகத்தில் உறுதி பெறவும் இது உதவியாக இருக்கும்.
- எமது மறைமாவட்டத்தை ஆன்மீகத்தில் கட்டியெழுப்ப இது சிறந்த சந்தர்ப்பமாகும்.
- இம் முயற்சி பலனளிக்க குருக்கள், துறவற சகோதரசகோதரிகள், பொதுநிலை விசுவாசிகள் அனைவரும் முழுமையாக ஒத்துழைப்புகொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

~ ஆயர் ~

# மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான ஒளிவிழா - 2016

எமது மறைமாவட்டத்திலுள்ள மறையாசிரியர்களுக்கான வருடாந்த ஒளிவிழா 10. 12. 2106 அன்று காலை 10 மணியளவில் ஆரம்பமானது.

இவ்விழாவிற்கு எமது மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்கள் பிரதமவிருந்தினராகவும், எமது ஓய்வு பெற்ற ஆயர் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் கௌரவ விருந்தினராக வருகை தந்து இவ்விழாவினை சிறப்பித்ததோடு இருவரும் தங்கள் பிறந்த தினங்களையும் சிறப்பித்தனர்.

இவ்வருடம் கனிசமான அளவில் பங்குத் தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்து கொண்டார்கள். மறையாசிரியர்களின் வருகையும் எதிர்பார்த்ததை விட அதிகமாக காணப்பட்டது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மறையாசிரியர்களால் வழங்கப்பட்ட நிகழ்ச்சிகளும் தரமானதாக இருந்தது அத்துடன் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மறையாசிரியர் ஒன்றியம் மறையாசிரியர்களுடன் செவ்வனே நிறைவேற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் ஒளிவிழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை நவில்கின்றோம். இனிவரும் காலங்களிலும் இவ் ஒளிவிழாவானது சிறப்புடன் நடைபெறும் என எதிர்ப்பார்க்கிறோம்.

8ம் பக்கத்தில் புகைப்படம்

# கிறிஸ்மஸ் குடில்கள்

**கிறிஸ்மஸ் குடில்கள் அமைக்கும் பழக்கம் 700 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. உலகின் முதல் முதலாக கிறிஸ்மஸ் குடில் அமைத்தவர் புனித பிரான்சிஸ் அசிசி. இவர் 1223ஆம் ஆண்டு குடில் வைக்கும் வழக்கத்தை தொடங்கி வைத்தார். இத்தாலியில் கிரேசியா கிராமத்தைச் சேர்ந்த ஜியோனி என்பவர் மூலம் புனித பிரான்சிஸ் அசிசி இயேசு பாலன் போல வேடமிட்ட குழந்தைகளைக் கொண்டும், ஆடுமாடுகளைக் கொண்டும் உயிருள்ள குடிலை அமைத்தார். அமைத்தார் இதற்குத் திருத்தந்தை மூன்றாம் ஹொனோரியார் அனுமதி அளித்தார்.**

**இதன் பிறகே குடில் பொம்மைகள் வைத்துக் குடில் அமைக்கும் பழக்கம் உலகில் வந்தது. உலகிலேயே முதன் முதலாக பொம்மை கிறிஸ்மஸ் குடில் ரோம் நகரில் சந்தா மேசியார் என்னும் தேவாலயத்தில் அமைக்கப்பட்டது.**

# கிறிஸ்துமஸ் கேரல்ஸ்



**கி.பி. 11 மற்றும் 12ம் நூற்றாண்டுகளில் ஜெர்மனியில் கிறிஸ்துமஸ் பாடல்களும், ஜோயல் கீதங்களும் பாடப்பட்டன. தொடர்ந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஜேக்கப் போண்டாடாடி என்பவரே 'கேரல்ஸ் ' என்று கிறிஸ்துமஸ் கீதங்களை அறிமுகப்படுத்தினார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புமிகு மாணவரே

## உமக்காக ....................... மடல் – 1

### 'எண்ணமே செயலின் தொடக்கம் : திட்டமிடல் எல்லாச் செயலாக்கத்திற்கும் முன் செல்கிறது (சீராக் 37 : 16)

அன்புள்ள மாணவ, மாணவிகளே. வாசக நெஞ்சங்களே,~ **இழப்புக்கள் தோல்விகள் அல்ல**



மலர் மணத்தை சந்திப்பதுண்டு
வானம் நிலவைச் சந்திப்பதுண்டு
நிலம் நீரை சந்திப்பதுண்டு
கடல் கரையையும்
மயில் மேகத்தையும்
குயில் சோலையையும்
சந்திப்பதுண்டு

இவை யாவும் அழகான, ரம்மியமான சந்திப்புக்கள்.
நானும் உன்னை சந்திக்க திருமலைத் தீபத்தின் வழியாக வருகிறேன். எமது சந்திப்பு கல்விப் பற்றியதாக இருக்கப் போகிறது. இவ்வருடம் நிறைவடையப் போகும்
நிலையில் அனைவருக்கும் கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு விடயத்திற்கு வருகின்றேன்.

2016 டிசம்பர் மாதத்தில் க.பொ.த (சா)தர பரீட்சை எழுதும் சகல மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்கைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.
மிகச் சிறந்த பெறுபேறுகள் கிடைக்க வேண்டும் என இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன். கஸ்டப்பட்டு படித்து ஒரு சிறந்த பெறுபேற்றினை பெற வேண்டும் என்று எதிர்ப்பார்த்திருப்பாய் உங்கள் பெற்றோரும் அதையே ஆவலாகக் கொண்டிருப்பார். அவ்வாறே நடக்க வேண்டும் என வாழ்துகின்றேன்.

வருட முடிவானபடியால் ஏனைய மாணவர்கள் வருட முடிவுப் பரீட்சையை முடித்து புதிய வகுப்பிற்கு செல்லும் உற்சாகத்துடன் இருப்பதை பார்க்கின்றேன் சில மாணவர்கள் குறைந்த புள்ளிகளைப் பெற்று கவலையோடு இருப்பதையும் என்னால் உணரமுடிகிறது. **'நலிவுற்றோர் ஞானம் அவர்களை தலைநிமிரச் செய்யும் பெரியோர்கள் நடுவில் அவர்களை அமரச் செய்யும்'** (சீராக் 11:1) என்று விவிலியம் கூறுகிறது.

குறைந்த புள்ளி பெற்றுவிட்டாய் என்று உன் பெற்றவள் திட்டினால் அது அன்பின் பிணைப்பு என்று ஏற்றுக்கொள். உன் தந்தை திட்டினால் அது அவரது கடமை என்பதை புரிந்து கொள் நீ பிறரால் பரிகசிக்கப்பட்டால் உன் சிந்தனை கொஞ்சம் வேகமாக செயல்பட வேண்டும். உன் கல்வி நிலைபற்றி பிறர் குறைவாகப் பேசினால் அவர்கள் ஏன்? எதற்காக கூறுகிறார்கள் என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும். உன் கல்வித் தேவையின் குறைகளை சரி செய்து கொள்ளவில்லை என்றால் நீ தன்னம்பிக்கை அற்றவன் ஆகி விடுவாய். நீ இனியும் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் போகும்.

நீ புள்ளிகள் குறைவாகப் பெற்றுவிட்டாய் என கவலைப்படுகிறாயா? வாழ்க்கையே வெறுத்து விட்டது என்று கலங்கிப் போய் நிற்கிறாயா? இனி நான் என்ன செய்வேன் என ஏங்கி நிற்கிறாயா? கவலைப்படாதே புள்ளி இழப்புகள் தோல்விகள் அல்ல துணிந்து நில் உன் எதிர்காலம் வெற்றிப் படியாக மாறலாம், மாறும்

**எறும்புகள்** : இவை வலிமையற்ற இனம் எனினும் கோடைகாலத்தில் உணவைச் சேமித்து வைத்துக்கொள்கின்றன.

**குறுமுயல்கள்:** இவையும் வலிமையற்ற இனமே எனினும் இவை கற்பாறைகளுக்கிடையே தம் வளைகளை அமைத்துக் கொள்கின்றன.

**வெட்டுக்கிளி:** இவற்றிற்கு அரசன் இல்லை எனினும் இவை அணிஅணியாக புறப்பட்டுச் செல்லும்.

**பல்லி** : இதை கைக்குள் அடக்கி விடலாம் எனினும் இது அரச மாளிகையிலும் காணப்படும் (நீ.மொ 30:25~28)

சிறிய பிராணிகளுக்கே இவ்வளவு திறமை இருக்குமானால் உனக்கு எவ்வளவு வலிமை இருக்க வேண்டும். இன்று முதல் புதிய வகுப்பில் அதிக புள்ளி எடுக்க வேண்டும் என்ற வாஞ்சையுடன் புதிய ஆண்டில் காலடி எடுத்து வை



பால்குடி மறவாத
குழந்தை அல்ல ~ நீ
பால் முனைக்கையில்
வாழ்க்கை வலிக்கும்
மாற்றம் முனைக்கையில்
வாழ்க்கை வலிக்கும்
வலியெடுக்கையில்
வழி பிறக்கும்
இயேசு ஒளி உதிர்த்தால்
உலகம் செழிக்கும்

உனது வாழ்க்கையில் குறைந்த புள்ளி எடுத்துவிட்டேன் என்ற வலி உனக்கு இனி வழி பிறக்கப் போகிறது. கலங்காதே தயங்காதே உனது கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வழி என்ன? இது பற்றி அடுத்த மடலில் சந்திப்போம்.

அன்புடன்
ஜோ. நோமன் பல்தஸார்
ஓய்வு நிலை அதிபர்

## நிலாவெளியில் அருள் மழை பொழியும் சூசையப்பர்



நிலாவெளியின் மத்தியிலோர் கோயில்
நித்தமருள் புரியுமிறை வாயில்
அலையலையாய் மக்கள் தொழ வருவார்
அனைவருக்கும் புனிதவளனார் அருளைச் சொரிவார்

ஏசுபாலன் தனைவளர்த்த தந்தை
இனிமை மிகும் அருள் நிறைந்த சிந்தை
மாசிலாத மாதாவின் நேயன்
மக்களெலாம் தொழ தேற்றும் தூயன்

ஏழை மக்களனை வருக்கும் தோழன்
இடருற்றோர் துயர் கலைக்கு மன்பாளன்
வாழ வழிமறந்தோர்க் கருள் விளக்கு
வழிதுணையாய்ச் சொல்வுமன்பின் இலக்கு

பகை வெறியர் சூழ்ந்திருந்த வேளை
பயம் நீக்கி மக்களுயிர் காத்தார்
புகலிடங்கள் கொடுத்தவரை அணைத்தார்
புனிதமுடன் குடைநிழலுள் இணைத்தார்

எக்குறையும் நீக்கவல்லார் சூசை
எம்மத்து மக்களுக்கும் தாதை
சிக்கலெவர்க்குற்றாலும் தீர்ப்பார்
இருட்டினிலும் உரிய இடம் சேர்ப்பார்

உப்பளமும் நெல்வயலும் இன்னும்
உள்ளபயிர் வகைகளெல்லாம் மின்னும்
செப்பமுடன் நிலாவெளியூர் செழிக்கும்
செழிப்பதற்கு புனிதவளனருள் மழையை அளிக்கும்

**அருட்பாவலர் நிலா தமிழின் தாசன்**
**நிலாவெளி**

### மட்டக்களப்பு உளவள துறையால் அகில இலங்கை ரீதியால் நடத்தப்பட்ட கவிதை போட்டியில் 3ம் இடம் பெற்ற கவிதை.

அருட்பணி N.C அருள்வரதன்

## மனநலம் சிறக்க இனநலம் சிறக்கும்

மனநலம் சிறந்து
மகிமைசேர
இனநலம் உள்ளத்தில்
மேலோங்கியே
இமயமாய் உயர்ந்தே
நின்றிடவே இதன்
விளைவுகள்
நிறைவினைத் தந்திடுமே

உள்ளம் நிறைந்தே
அன்புதனால்
உயர்வின் நிலைகளை
வருடிவர
உள்ளங்கள் நிறைந்தே
வெளிவரும் சொற்களும்
சொற்களைப் போன்ற
செயல்களுமங்கே
நிறைந்த மகிழ்வையே
தந்திடுமே

மனக்கடினம்
மனக்கொதிப்பு இவைகள்
பழி உணர்வைத் தோற்றுவிக்கும்
அடித்தளமாகுமே
பகையும் பழியும்
வெறுப்புணர்வுகள்
பரந்து மனதுள்
நிறைந்திடவே இதன்
விளைவுகள்
பாதக நிலைகளாகுமே.

வெறுக்கும் நிலைகளை
இனங்கண்டு அதன்
வேர்களை அறுத்து
வெட்டி வீழ்த்தவே
மனந்துடிக்கும் விளைவுகளாய்
வெற்றியின் கனிகளே
நிறைந்திருக்கும்

உள்ளத்தூய்மைகள்
உயர்வு கண்டால்
பகையோ வெறுப்போ
பாதகங்கள்
மனதுள் நிலைத்தே
நின்றிடாமல்
மறைந்தே கலைந்தே
போய்விடுமே

மொழியோ இனமோ
மதமெதுவோ எந்த
பேதங்கள் ஏதுமே
தெரியாமலே
மறைந்தே கலைந்து
போவதற்கு
மனிதங்கள் மனதிலே
மலர வேண்டுமே.

இன நலம் சிறந்து
எழிலெனத் துலங்கவே
மனநலம் பெரிதென நின்றே
மாண்பினைச் சொல்லிட
வேண்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை ஆராதனை 2017

| | | | |
|---|---|---|---|
| 01. ஜனவரி ~ | ~ 07 ~ | ~ சனிக்கிழமை | ~ தூய மரியாள் பேராலயம் |
| 02. பெப்ரவரி ~ | ~ 11 ~ | ~ சனிக்கிழமை | ~ பாலையூற்று |
| 03. மார்ச் ~ | ~ 24 ~25~ | வெள்ளி, சனி (24 மணிநேர ஆராதனை அனைத்து ஆலயங்களிலும்) | |
| 04. ஏப்ரல் ~ | ~ 08 ~ | ~ சனிக்கிழமை | ~ செல்வநாயகபுரம் |
| 05. மே ~ | ~ 06 ~ | ~ சனிக்கிழமை | ~ சாம்பல்தீவு |
| 06. ஜூன் ~ | ~ 10 ~ | ~ சனிக்கிழமை | ~ நிலாவெளி |
| 07. யூலை ~ | ~ 08 ~ | ~ சனிக்கிழமை | ~ உவர்மலை |
| 08. ஆகஸ்ட் ~ | ~ 12 ~ | ~ சனிக்கிழமை | ~ தம்பலகாமம் |
| 09. செப்டம்பர்~ | ~ 09 ~ | ~சனிக்கிழமை | ~ சின்னக்கடை |
| 10. ஒக்டோபர்~ | ~14 ~ | ~ சனிக்கிழமை | ~ அலஸ்தோட்டம் |
| 11. நவம்பர் ~ | ~ 11 ~ | ~ சனிக்கிழமை | ~ இருதயபுரம் |
| 12. டிசம்பர் ~ | ~09 ~ | ~ சனிக்கிழமை | ~ மூதூர் |

# தூய வின்சன் டி பவுல் சபை ஆரம்பம்

நிலாவெளி தூய சூசையப்பர் ஆலயபங்கின் உப பங்கான தூய சவேரியார் ஆலயத்தில் 27.11.2016 அன்று தூய வின்சன் டி பவுல் சபையானது முதல் முறையாக 08 அங்கத்தவர்களுடன் ஆரம்பமானது.

நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு :~

தலைவர் : திருமதி ஏ. அற்புதமலர்

உப தலைவர் : திருமதி ஏ. ஞானச்செல்வி

செயலாளர் : T. விஜயதர்சினி

பொருளாளர் : திரு. A. யூட் அல்வின்~மற்றும் ஏனைய உறுப்பினர்களாக:

திருமதி A. கமலதர்சினி

திருமதி அல்வின் ரதனி

திருமதி. N. சுலோஜனா

திரு. S. அருள்பிரகாசம்

போன்றவர்கள் இச்சபையில் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களது பணி பங்கிலே செவ்வனே நடைபெறும் என்பதையும் தங்களால் ஆன உதவிகளை ஏழைகளுக்கு வழங்குவதற்கு இச்சபை ஒரு பாலமாக அமையும் என்பதையும் இச்சபை உறுதிப்படுத்துகின்றது.

# இதயதீபம் முன்பள்ளியின் பட்டமளிப்பு விழா – 2016

தூய வார்து அன்னைத் திருத்தலத்தில் அமைந்துள்ள இதய தீபம் முன்பள்ளியின் பட்டமளிப்பு விழாவானது 24.11.2016 அன்று மு.ப 9மணிக்கு அனா மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக வலயக்கல்வி பணிப்பாளர் திரு. தவநாதன் அவர்களும் தி/வார்து அன்னை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி மெக்டலின் திரேசா அவர்களும் முன்பள்ளியின் இயக்குனர் அருட்பணி செ.மதுராங்கன் குரூஸ் அவர்களும் கலந்துக் கொண்டு சிறார்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

~ 8ம் பக்கத்தில் புகைப்படம்

# தி/ ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலய ஒளிவிழா – 2016

திருகோணமலை இலிங்கநகர் தி/ ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலய வருடாந்த ஒளிவிழா 29.11.2016 அன்று அதிபர் N. ஜனகன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு அருட்தந்தை செ.சுகுனேந்திரன் குரூஸ் (பங்குத்தந்தை உவர்மலை), திரு G.A. பிரான்சிஸ் (எகேட் கரித்தாஸ்), திரு. தெய்வேந்திரராசா (கரித்தாஸ் செடேக் ), செல்வி K. சூரியகுமாரி (எகேட் கரிதாஸ்), திரு J. பத்திநாதர், அருட்சகோதரி லிசா ஜெப்சி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

**தகவல் திருமதி ஞானமலர் கிருஸ்ணமூர்த்தி**

~ 8ம் பக்கத்தில் புகைப்படம்

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை திருமலைத் தீபத்திற்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :~ ஆசிரியர்
திருமலைத் தீபம்
297, டொக்கியார் வீதி,
திருகோணமலை.

# 2017 வரும் ஆண்டில்....

புதியசிந்தனைகள்......
புதியமுன்னெடுப்புகள்.....
புதியதிட்டங்கள்.....
புதியசெயல்பாடுகள்.....

**ஒரே மறைமாவட்டமாக கைகோர்த்து:**

எமது ஆன்மீகத்தை வளர்ப்போம்!
மறைமாவட்ட திட்டங்களுக்கு ஒத்துழைப்பு கொடுப்போம்!
பார்வையாளர்களாக அல்ல பங்காளிகளாக செயல்படுவோம்!

2017ம் ஆண்டிற்கான கருப்பொருள் :
**'நற்செய்தி: அவர் பணியும் நம் வாழ்வும்'**

**தலைப்புகள்:**

1. தூய யோசேப் வாஸ் ஆண்டு
2. தூய மத்தேயு நற்செய்தி ஆண்டு
3. குடும்ப அப்போஸ்தலத்துவம் ஆண்டு

# குட்டிக்கதை ஒன்று

F.r. N.C

ஒரு கிராமத்திலே ஆன்மீகக் கருத்தரங்கொன்று நடந்து கொண்டிருந்தது பலரும் திரண்டிருந்தனர். கருத்தரங்கிலே ஒருவர் தனது உரையின்போது அன்பை அடித்தளமாகக் கொண்டு உரையாற்றினார். துன்புறுவோரின் துயரங்களை துடைக்கவும் வறுமையில் வாடுவோரின் துயர்களை நீக்கி உதவிகள் புரியவும் என்னும் தொனிகளிலே சிறப்பாக உரையாற்றி முடித்தார்.

நிகழ்ச்சிகள் நிறைவடைந்த போது இருவர் மிகவும் வறியவர்கள் ஒருவர் நடக்க முடியாதவர் மற்றவர் பார்வை அற்றவர் இருவரும் எப்படியோ அந்த அன்பைப் பற்றிய பேச்சாளரை கண்டுபிடித்துவிட்டார்கள் அவரும் போவதற்கு ஆயத்தமாக தனது வாகனத்தில் ஏறிகொண்டபோது இரு ஏழைகளும் ஒன்றாக **'ஐயா எங்களுக்கு உதவி செய்யுங்க சாப்பிடக் கூட வழி இல்லை இருக்கவும் இடமில்லை நீங்க பேசினதைக் கேட்டோம் அதுதான் உதவி கேட்டு வந்திருக்கோம் என்றார்கள்'**. அதற்கு அவர் **'நான் பேசத்தான் வந்தனான் பிச்சை போட வரல்ல'** சொல்லிக்கொண்டே புறப்பட்டுவிட்டார். இரண்டு ஏழைகளும் அழுது கொண்டே நின்றார்கள். **'சொல்வார்கள் ஆனால் செயலில் காட்ட மாட்டார்கள்'** என்பது உண்மையாவது தெரிகின்றதல்லவா.

# திருவருகைக் காலம் கிறிஸ்து பிறப்பு தாழ்ச்சியின் செய்தி

இறை நிலையிலிருந்து மனித நிலைக்கு தன்னை தாழ்த்திக் கொண்டஇறை நிகழ்வே இந்த கிறிஸ்து பிறப்பு விழா. தான், தனது, என்ற அகங்கார நிலை, நம்மை, பல நேரங்களில் மற்றவர்களை பற்றி, அவர்கள் நிலையிலிருந்து சிந்திக்க விடாமல் மாற்றிவிடுகிறது.

நாம் காணும் உலகத்திலிருந்து மற்றவர்களை பார்க்கிறோம். அவர்களையும் பார்க்க கட்டாயப்படுத்துகிறோம். இறைவன் மனிதனாகும் போது, கிறிஸ்து பிறக்கிறார். மீட்பின் பிறப்பு நம்மிடையே நிகழ்கிறது. நம் சிந்தனையில் பிறரின் நிலைக்கு மாறும் போது, அங்கே மனிதம் பிறக்கிறது. புதிய உறவு மலர்கின்றது. நமது அணுகுமுறைகளில், பிறரை அவர்கள் மனநிலையில் இருந்து புரிந்து கொள்ள முயற்சிப்போம். தாழ்ச்சியில் புனிதராக வில்லையெனினும் குறைந்தது மனிதராகுவோம். இறைமைந்தன் நம்மில் நம் உறவில் பிறக்கட்டும்.

~ ஆதாரம் வத்திக்கான் ~

# மறைபரப்பு ஞாயிறு பங்குகளின் காணிக்கை – 2016

| இல | பங்கு | பெற்றதொகை |
|---|---|---|
| 01. | தூய வார்து அன்னை, பாலையூற்று | 63,900.00 |
| 02. | தூய மரியாள் பேராலயம் | 53,880.00 |
| 03. | இறை இரக்கம், அலஸ்தோட்டம் | 16,700.00 |
| 04. | தூய அந்தோனியார், மூதூர் | 16,450.00 |
| 05. | குழந்தை இயேசு, உவர்மலை | 11,690.00 |
| 06. | தூய வனத்து அந்தோனியார், செல்வநாயகபுரம் | 10,260.00 |
| 07. | தூய குவாடலூப்பே, சின்னக்கடை | 10,210.00 |
| 08. | தூய திருமுழுக்கு யோவான், சாம்பல்தீவு | 7,100.00 |
| 09. | தூய திரு இருதய ஆண்டவர், மூதூர் | 6,500.00 |
| 10. | தூய அந்தோனியார், சீனன்குடா | 5,700.00 |
| 11. | தூய சூசையப்பர், நிலாவெளி | 4,080.00 |
| 12. | கிறிஸ்து அரசர், கன்னியா | 3,500.00 |
| 13. | தூய சதாசகாய மாதா, கந்தளாய் | 2,000.00 |
| 14. | கப்பல்துறை, தம்பலகாமம் | 1,680.00 |
| 15. | தூய செபமாலை மாதா, குச்சவெளி | 1,000.00 |
| | **முழுத்தொகை** | **2,14,650.00** |

தகவல் அருட்தந்தை ம.அன்ருஸ்ரீபன்
நிதிப்பொறுப்பாளர் ஆயர் இல்லம், உவர்மலை, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஜோசேப் வாஸ் அடிகளாரின் ஒரு சில வாழ்க்கைக் குறிப்புகள்



### 1. பெனுவாலிம்

கோவா நகரிலுள்ள சல்செட் பிதேசத்தில் பெனுவாலிம் எனும் தமது தாயாரின் கிராமத்தில் கி.பி. 1651ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஜோசேப்வாஸ் அடிகளார் பிறந்தார். கிறிஸ்டோபர் வாஸ், மரிய மிராண்டா எனும் பக்தி நிரம்பிய கொங்கனி இனத்து பாரம்பரிய குலத்தின் தம்பதியர் இவரது பெற்றோராவார்.



### 2. தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், பெனுவாலிம்

தூய ஜோசேப்வாஸ் அடிகளார் பிறந்து எட்டாம் நாளிலே தம் தாயாரின் இல்லத்திற்கு அண்மித்த பெனுவாலிமிலுள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் அருட்தந்தை ஜயசிந் பெரேரா அடிகளாரிடம் திருமுழுக்கு பெற்றார்.



### 3. சன்கோலே

சிறுவன் ஜோசேப்வாஸ் தமது தந்தையாரின் கிராமமான கோவா நகரிலுள்ள சன்கோலே பிரதேசத்தில், அவரது தந்தையின் பாரம்பரிய இல்லத்தில் வாழ்ந்தார். இவ்வில்லம் தற்போது கன்னியர் மடமாக விளங்குகிறது.



### 4. புனித பிலிப் சிமியோன் ஆலயம்

தூய ஜோசேப்வாஸ் அடிகளாரின் தந்தையாரின் இல்லத்திற்கு அண்மையில் கொர்த்தாலிம் புனிதர்கள் பிலிப், சிமியோன் ஆலயம் காணப்படுகின்றது. சிறுவன் ஜோசேப்வாஸ் தினந்தோறும் இரவில் இவ் ஆலயத்திற்கு செபிக்க செல்வதை வழமையாகக் கொண்டிருந்தார். அவ்வேளையில் மூடியிருக்கும் ஆலய கதவுகள் அடிகளாரின் கை பட்டதும் திறக்கப்பட்டதாக கூறப்படுகிறது.



### 5. சன்கோலே கிராமத்தின் புனித சிறுவன்

தூய ஜோசேப்வாஸ் அடிகளாரை 'சிறிய புனிதர்' என்று செல்லமாக அழைப்பார்கள். கிராமவாசியான அந்தோனியோ கார்டோசா என்பவர் அடிகளாரைப்பற்றி இவ்வாறு கூறியுள்ளார்.

### 6. கோவா புனித அக்குவைனஸ் உயர் கல்வி கூடம்

சன்கோலேயில் ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் கற்ற யோசேப்வாஸ் அடிகளார் தனது குருத்துவக் கல்வியை கோவாவிலுள்ள புனித அக்குவைனஸ் உயர்கல்வி கூடத்தில் நுழைந்து, இறையியல், மெய்யியல், என்பவற்றை கற்றுத் தேர்ந்தார்.

தொடரும்......................

# மத்தேயு நற்செய்தி: ஓர் அறிமுகம்



### ஆசிரியர்

மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் யார் என்பதில் சிரமமுள்ளது. இந் நற்செய்தி நூல் ஆசிரியர் பற்றி எதுவும் கூறவில்லை "மத்தேயு நற்செய்தி" என்ற தலைப்பு கூட கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் தோன்றியது என அறிஞர்கள் கருதுகின்றனர்.

### புற ஆதாரங்கள்

மத்தேயுவே முதல் நற்செய்தியின் ஆசிரியர் என்பது பாப்பியாஸ் (Papias) என்ற அறிஞரிடமிருந்து வருகிறது. (கி.பி 100 - 125). யுசேபியுஸ் என்ற திருச்சபையின் வரலாற்று ஆசிரியர் இவரை மேற்கோள் காட்டுகிறார். "மத்தேயு அரமேயிக்கில் இயேசுவின் கூற்றுக்களை (Logia) நிரல்பட எழுதினார். ஒவ்வொருவரும் அவரது இயல்புக்கேற்ப அதற்கு விளக்கம் தந்தனர்". இதைத் தொடர்ந்து திருச்சபையின் தந்தையர்கள், இயேசுவின் கூற்றுக்களை ஒருங்கிணைத்து எழுதியவர் என்ற முறையில், மத்தேயு இயேசுவின் திருத்தூதர் இந்நற்செய்தியை எழுதினார் எனக் கொண்டனர். இரேனியுசும், கிளமெந்தும் மத்தேயுவே ஆசிரியர் என எழுதினர்.

இயேசுவின் கூற்றுக்கள் என்பது அவரது போதனைகளைச் சுட்டுகின்றது. சிலர் மத்தேயு இதை அரமேயுக்குவில் எழுதினார் என்பர் ஒருசிலர் அரமேயுக்குவில் வழியாக இருந்த நற்செய்தியினின்று கிரேக்கத்தில் எழுதப்பட்டது என்பர்.

### ஆசிரியர் யார் என்ற ஆய்வுகளின் முடிவு

1. மத்தேயு நற்செய்தியை எழுதவில்லை. மாறாக இயேசுவின் கூற்றுக்களை (Logia) ஒன்று சேர்த்துள்ளார். இவை பல மூலங்களுள் (Quelle) ஒன்று.
2. மத்தேயுவின் சீடர் ஒருவர் எழுதியிருக்கலாம்.
3. மத்தேயுவின் பள்ளியைச் (School of Matthew) சார்ந்த அறிஞர்களுள் சிலர் ஒன்று சேர்ந்து எழுதியிருக்கலாம். ஆனால் நற்செய்தியின் மொழி, நடை அமைப்பு இக்கருத்தை ஏற்பதில்லை.

இந் நற்செய்தி கிரேக்க மொழி பெயர்ப்பென்றில்லாமல் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதாக தெரிகிறது. சொற்கள், இலக்கண நயம், சொற்றொடர்கள், அமைப்புக்கள் இவைகளில் கிரேக்க மணம் கமழ்கிறது. ஆனால் இதன் நிகழ்ச்சியுரைகளில் (Narratives) உணர்ச்சி தூண்டுதலையோ துடிப்பையோ காண முடியாது. அருகிருந்து பார்த்தவர் ஒருவர் எழுதியது போல் இந் நற்செய்தி இல்லை. மாற்கு நற்செய்தியாளரைப் போல் நற்செய்திக்குள் நுழையாமல் விலகியே நிற்கிறார் மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் (Matthew is impersonal).

### மத்தேயு

மத்தேயுதான் இந் நற்செய்தியை எழுதினார் எனக் கொண்டால் இவர் பன்னிரு தூதவர்களில் ஒருவர் (மாற் 3:18, மத் 10:3, லூக் 6:5, திப1:13,). இயேசு அழைப்பதற்கு முன் இவர் வரிதண்டுபவராக இருந்தார். (மத்10:3). மாற்கும் (2:14) லூக்காவும் (5:27) இவரை லேவி என்று குறிப்பிடுகின்றனர். மத்தேயுவிற்கு இரண்டு பெயர்கள் (மத்தேயு, லேவி) இருந்திருக்கலாம் என்பது இப்போது ஒப்புக்கொள்ளப் படவில்லை. 'மத்தாயோஸ்' என்றால் 'யாவேயின் கொடை' என்பது பொருள்.

மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் ஒரு கிறிஸ்தவ இறையியலாளர். இவருக்கு பழைய ஏற்பாடு நன்றாகத் தெரியும். இவர் ஓர் யூதக் கிறிஸ்தவ இறையியலாளர் என்றால் அரமேயுக்கும் இவருக்குத் தெரியும் இவர் ஒரு மறைநூல் அறிஞர் "தம் கருவூலத்திலிருந்து புதியனவற்றையும் பழையனவற்றையும் வெளிக்கொரும் வீட்டு உரிமையாளர்" (மத் 13:52)

# விவிலியத்தில் குடும்பம்



### முன்னுரை

வாழ்வு தரும் வார்த்தைகளின் வார்ப்பு நூலாக விவிலியம் விளங்குகிறது. எழுபத்து மூன்று (46 +27 - 73) நூல்களும் ஆயிரத்து முந்நூற்று முப்பத்து நான்கு (1074 +260- 1334) அதிகாரங்களும் பெற்ற பெருமைக்குரியது இத்திருநூல். உலகில் ஈரயாயிரத்து ஐம்பத்து ஒன்பது மொழிகளில் வழங்கப்பட்டுள்ளது. "நான் நடக்க வேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம் வார்த்தை: செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே" (தி.பா 118:104) என்று எல்லோராலும் ஏற்றுப் போற்றப்பெறும் ஆற்றலும் ஏற்றமும் வாய்ந்தது விவிலியத் திருநூல். " எல்லாப் பொருளும்இதன் பால் உள்ளன". என்று கூறத்தக்க விவிலியத்தில், நாட்டின் அடிப்படைச் சமூகமாம் குடும்பம் பற்றிக் குறிக்கப்பெற்ற செய்தியைத் தொகுத்துக் காண்பது பயன்தரும் செயலாகும்.

### நல்ல குடும்பம்

நல்ல குடும்பம் அருட் கோவிலாகும் பெருங் கல்விக் கூடமாகவும் திருவருளின் ஊற்றிடமாகவும் திகழும். "கனிதரும் திராட்சை கொடி போல் உம் துணைவியார் வீட்டில் உட்புறத்தில் இருப்பாள்: ஒலிவக் கன்றுகள் போல உம்மைச் சூழ்ந்திருப்பர்" (தி.பா 128 : 3) நீதிநெறியுடன் வாழ்ந்து வந்த நோவா குடும்பம் வெள்ளப் பெருக்கிலிருந்து காக்கப்பட்டது கருதத்தக்கது. இஸ்ரயேல் இனத்தின் தலையாய குடும்பத்தாரான ஆபிரகாம் ~ சாராள், ஈசாக்கு ~ இரபேக்கா,

யாக்கோபு ~ இராக்கேல் ஆகியோர் இறைவனின் வாக்குறுதிகளை பெற்று இறைவனை சார்ந்து வாழ்ந்தவராவர். (தொ.நூல் 12 : 30) இறைவாக்கினர் சாமுவேலின் தந்தை எல்கானா மனைவியிடம் அன்பும் பொறுமையும் கொண்ட சிறந்த கணவனாகவும், மலடியாக இருந்து இறைவேண்டலால் பிள்ளை பெற்ற அன்னாள் கணவனை மதித்து நல்ல மனைவியாகவும் மிளிர்கின்றனர். இறைப்பற்றுடன் இளமைப் பருவத்திலிருந்தே பெற்றோரை போற்றிப் பாராட்டி விழுமிய மகனாக விளங்குகிறார், சாமுவேல் ( 1 சாமுவேல் 1 ~ 4 ) மருமகளின் நலன் பேணிய மாமியார் நவோமியும் மாமியாருக்கு துணைபுரிந்த மருமகள் ரூத்தும் மாமியார் மருமகள் உறவுக்குச் சிறந்த சான்று தருவோராவர்.

### குடும்ப வாழ்வு

" மனிதன் தனியாயிருப்பது நன்றன்று, அவனுக்குச் சரிநிகரான ஒரு துணைவியை அவனுக்கென உண்டாக்குவோம்" என்ற இறைவன், "மனிதன் தன் தந்தையையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான்" என்றார். (தொ.நூல் 2: 18 ~ 24) " கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்". என்று இறைமகன் இயேசு தெளிவுறுத்தியுள்ளார் (மத் 19:6). தூய பவுலடியார் கொலோசேயருக்கு எழுதிய திருமுகத்தில் ஒவ்வொருவரின் கடமைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். "மனைவியரே உங்கள் கணவருக்குப் பணிந்து நடங்கள். இதுவே ஆண்டவருக்குள் வாழும் முறை. கணவர்களே உங்கள் மனைவியருக்கு அன்பு காட்டுங்கள், அவர்கள் மேல் எரிந்து விழாதீர்கள், பிள்ளைகளே எல்லாவற்றிலும் பெற்றோருக்குக் கீழ்படிந்திருங்கள். இதுவே ஆண்டவருக்கு உகந்தது. தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்ட வேண்டாம். அவர்கள் மனந் தளர்ந்து போகாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். (நீ.மொ 3:18~21) ஞானமும் விவேகமும் நம்முடன் தொடர்ந்து வரவேண்டிய தேவையினை நீதிமொழிகள் உறுதிப்படுத்தியுள்ளது. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்று சொல் விவேகத்தை உன் தோழி என்று அழை. அவை நயமாகவும் இனிமையாகவும் பேசுகிற அன்னியப் பெண்ணிடமிருந்து உன்னைக் காக்கும். (நீ.மொ 7: 4 ~5) ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விக்கிறான் மதிகெட்ட மகனோ தன் தாய்க்கு துன்பத்தை வருவிக்கிறான். (நீ.மொ 10:1) சக்கரியாசு ஆகமம் உடன் பிறப்பு உணர்வை வலியுறுத்தி விளம்புகிறது. ஒவ்வொருவனும் தன் சகோதரனுக்கு இரக்கமும் அன்பும் காட்டுவானாக. கைம்பெண்ணையோ, அனாதைப் பிள்ளையையோ, அந்நியனையோ ஏழையையோ துண்புறுத்த வேண்டாம். உங்களுள் எவனும் தன் உள்ளத்தில் தன் சகோதரனுக்குத் தீமை செய்யக் கருதக் கூடாது (நீ.மொ 7 : 9 ~ 10).

தொடரும்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன் எழுதலைக் கண்டு

முன்னுரை

கிறிஸ்மஸ் காலம் அண்மித்து வருகிறது. நமது உணர்வுகளும் நினைவுகளும் இயேசுவின் பிறப்பைப் பற்றிய வரலாற்று நிகழ்வினைச் சுற்றி சுழல்கின்றன. இயேசுவின் பிறப்புப்பற்றிய படங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், கவிதைகள், காவியங்கள் ஆகிய அனைத்திலும் பாலன் இயேசு மாட்டு குடிலில் பிறந்திருக்கும் காட்சி அடுத்த படியாக, மூன்று ஞானிகள் அல்லது அரசர்கள் குழந்தை இயேசுவை ஆராதிக்கின்ற நிகழ்வு இடம்பிடித்துள்ளது. என்றால் மிகையாகாது. மத் 2 : 1 ~ 12ல் அளிக்கப்பட்ட விவகாரங்களின்படி இந்த நிகழ்ச்சியின் ஆழ்ந்த இறையியல் அர்த்தம் அல்லது பொருள் என்ன என்று ஆராய்வதும் அதன் அடிப்படையில் நாம் இவ்வாண்டின் கிறிஸ்மஸ் பெருவிழாவிற்கு நம்மை எப்படி தயாரிக்கலாம் என்றும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.



### யார் இந்த ஞானியர்?

கிரேக்க இலக்கியங்களில் முதல் முதலாக ஏறக்குறைய கிமு 450ம் ஆண்டுகளிலிருந்து சொராஸ்ட்ரியன் குருக்களாக ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இவர்கள் சில இரகசிய அறிவும் தந்திரமும் அறிந்தவர்களாக எண்ணப்பட்டனர். தானியேல் நூல் எழுதப்பட்ட காலத்தில் அவர்கள் கனவுகள், காட்சிகள் ஆகியவற்றின் பொருளை விளக்குபவர்களாக கருதப்பட்டனர். (காண் தானி 1 : 20,2 : 2 ~ 4, 5:7). இயேசுவின் சமகாலத்தவரான அலெக்ஸ்சாந்திரியாபிலோவும், அறிவுப்பூர்வமாக செயல்படும் மற்றும் தந்திர செயல்களில் ஈடுபடும் ஞானியர்களைப் பற்றி குறிப்பிடுகின்றனர். பிற்காலத்தில் உரோமையர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் வானவியல் அறிவு கொண்டவர்களாகவும் அறியப்பட்டனர். எனவே "ஞானிகள்" எனப்படுவோர்கள் மறைபொருளானவற்றை விளக்குபவர்களாக, வானவியல் பற்றி அறிந்தவர்கள், எதிர்காலத்தை கணிப்பவர்கள் ஆகியவர்களைக் குறிப்பதற்காகக்கொள்ளலாம். அவர்கள் அரசர்களாகவும் இருக்கலாம்.

### எங்கிருந்து வந்தவர்கள்?

புனித மத்தேயு அவர்கள் கிழக்கிலிருந்து எருசலேமுக்கு வந்ததாக குறிப்பிடுகின்றார் (மத் 2:1) இதன் அடிப்படையில் இவர்களின் பூர்வீகமாக மூன்று கூறுகளை அறிஞர்கள் முன்மொழிகின்றனர். ஞானியர் **(Magai)** எனும் சொல்லின் மூலத்தை ஆதாரமாகக் கொண்டு பார்த்தியர்கள் எனப்படும் பெர்சிய நாட்டினராக இருக்கலாம். விண்மீன் எழுதலின் வானவியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பாபிலோனைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். மேலும் அவர்கள் கொணர்ந்த காணிக்கை அல்லது அன்பளிப்பு பொருள்களின் அடிப்படையில் அவர்கள் அரேபிய மற்றும் சிரிய பாலைநிலங்களிலிருந்து வந்தவர்களாகவும் இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

### 'அவரது விண்மீன்' (மத் 2 : 2) எது?

பெருமகனார்களின் பிறப்பு, இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளின் போது விண்ணகத்தில் அருங்குறிகள் தென்படும் என்பது உரோமை இலக்கியங்களில் அறியப்பட்ட ஒன்றாகும். இயேசு பிறந்த காலத்திற்கு முன்னும் பின்னும் வானவியலில் என்ன என்ன மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம் என்பது குறித்து ஆராய்ந்த அறிவியலார் மூன்றுவகை சாத்தியக் கூறுகளை முன் மொழிகின்றனர். ஒன்று, ஒரு புதிய விண்மீன் தோன்றியிருக்கலாம், வால் விண்மீன் அல்லது வால் வெள்ளி தோன்றியிருக்கலாம். அல்லது கிரகங்கள் ஒன்றுக்கொன்று அருகாமையில் வந்திருக்கலாம். (காண் **Raymod E. Brown, The Birth of the Messiah, New York : Double day 1977,171 - 174)**

### கிறிஸ்தியலை விளக்க உதவும் இளமைப்பருவ நிகழ்வுகள்

மேலோட்டமாகப் பார்க்கும் போது இயேசுவின் பிறப்புத் தொடர்பான நிகழ்ச்சிகளைக் கூறும் வகையில் இளமைப்பருவ நிகழ்வுகள் (மத் 1~2: லூக்1~2) காணப்பட்டாலும், அவற்றினூடாக நற்செய்தியாளர் இயேசுவின் தன்மைகள், குணநலன்கள் மற்றும் பண்புகள் பற்றி விளக்குவதற்கும் இந்த இளமைப்பருவ நிகழ்வுகளை பயன்படுத்துகின்றனர். அந்த வகையில் மத்தேயு நற்செய்தியின் முதல் இரண்டு அதிகாரத்தின் பின்னணியில் 'ஞானியர் சந்திப்பு (மத் 2:1~12) தருகின்ற இறையியல் அல்லது கிறிஸ்தியல் செய்தி என்ன இனி ஆராய்ந்து விளக்குவோம்.

மத்தேயு நற்செய்தியின் முதல் இரண்டு அதிகாரங்கள் இயேசுவின் பிறப்பு மற்றும் இளமைக்கால நிகழ்வுகளை விவரிக்கின்றன. இவற்றுள் முதல் அதிகாரம் இயேசு யார்? எனும் வினாவிற்கு இயேசு தாவீதின் மகனும், ஆபிரகாமின் மகனும் ஆவார் என்பதை அவரது தலைமுறை அட்டவனை வழியாகவும் (மத் 1:1~17), "அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" (மத் 1:21) என்றும், அவர் கன்னியிடமிருந்து பிறந்த இம்மானுவேல் (மத் 1:22) என்றும் விளக்குகின்றது. மத்தேயு நற்செய்தியின் இரண்டாம் அதிகாரம் இந்த இம்மானுவேல் 'எங்கிருந்து வருகிறார்?' எனும் கேள்விக்கு பதில் தேடுகின்றது.

இது பெத்லகேமில் இயேசு பிறந்ததில் தொடங்கி (மத் 2:1) எகிப்துக்கு அடிபோவதை விளக்கி (மத் 2: 13~15) இறுதியில் அவர்கள் நாசரேத்தில் குடியேறுகிறதை (மத் 2:19~23) கூறி முடிக்கின்றது. இதன்படி இயேசு உண்மையில் தாவீதின் வழிமரபினர்என்பதை அவர் பெத்தலகேமில் பிறந்ததை வைத்து குறித்துகாட்டுகின்றார். அதே நேரத்தில் அவர் ஏன் நசரேயன் எனப்படுகிறார் (மத் 2:23)? மெசியா யூதேயாவிலிருந்து வராமல் ஏன் கலிலேயாவில் இருந்து வருகின்றார் (மத் 2:22)? எனும் கேள்விகளுக்கும் விளக்கமளிக்கின்றார்.

# மறைமாவட்ட நத்தார் விழா

திருகோணமலை மறைமாவட்டத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான நத்தார் விழாவானது கடந்த 12.12.2016 திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை பேராலய கலாச்சார மண்டபத்தில் அலைஓசை சமூகத் தொடர்பகத்தின் இயக்குனர் அருட்பணி எ.றொஹான் பேர்னாட் தலைமையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. மறைமாநில ஆயர் பேரருட் திரு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை பிரதம அதிதியாக கலந்துகொண்டு நத்தார் செய்தியை வழங்கியமை சிறப்பம்சமாகும். பேராலயம், குவாடலூப்பே, உவர்மலை மற்றும் பாலையூற்று ஆகிய பங்குகளின் ஒத்துழைப்புடனும் அலைஓசை கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவையின் ஒருங்கிணைப்புடன் மறைமாவட்டப் பங்குகளின் நத்தார் கீதங்கள், நடனம், வில்லுப்பாட்டு அடங்கலான மும்மொழி நிகழ்வுகளாகவும் மறை மாவட்டத்தின் முதலாவது நத்தார் விழாவாகவும் அமைந்தது
குறிப்பிடத்தக்கது.

இச்சிறப்பு நிகழ்விற்கு தமது ஊக்கங்களாலும், ஆக்கங்களாலும் நிகழ்ச்சிகளையும் தமது காத்திரமான பங்களிப்புக்களையும் நல்கிய அனைத்துப் பங்குத் தந்தையர்களுக்கும் பங்கு மக்களுக்கும், அலை ஓசை கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் அனைத்துப் பொதுநிலையினருக்கும் நத்தார் மற்றும் நிறைவான புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

**திரு. ச. சந்திரகுமார்,**
**செயலாளர்,**
**அலை ஓசை கிறிஸ்தவ கலை இலக்கியப் பேரவை,**
**திருகோணமலை.**

~ 8ம் பக்கத்தில் புகைப்படம்

# மறை மாவட்ட மேய்ப்புபணி பேரவை மாநாடு – 2016




திருகோணமலை மறை மாவட்ட மேய்ப்புப்பணி பேரவை மாநாடு கடந்த 2016.11.26 ஆம் திகதி உப்புவெளி மேய்ப்புப்பணி நிலையத்தில் பேரருட் திரு கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பங்குத் தந்தையர்கள், அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் உட்பட 130 பேர் பங்குபற்றியிருந்தனர். பொதுநிலையினர்களான திரு. ஜி.ஏ.பிரான்சிஸ், செல்வி. யூப்பிரசியா பல்தசார் மற்றும் திரு. வென்ஸ்லோ ஆகியோர் கௌரவிக்கப்பட்டமை இம் மாநாட்டின் சிறப்பசமாகும். இம் மாநாட்டில் 2017 ஆம் ஆண்டின் தொனிப்பொருளாக 'புனித யோசப் வாஸ் (2017) நற்செய்தி, அவர் பணியும் நம்வாழ்வும்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கான திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டதுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டின் புதிய நிர்வாகசபைக்கென பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் ~ பேரருட் திரு ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மாஹுவல் ஆண்டகை
செயலாளர் ~ திரு. ச. சந்திரகுமார்
உப செயலாளர் ~ திருமதி. புஸ்பலதா ஜோசப்
பொருளாளர் ~ திரு. எஸ். அன்ரனிதாஸ்
ஏனைய உறுப்பினர்கள்:
குருமுதல்வர் ~ அருட்தந்தை T. கிங்ஸ்லி றொபர்ட்
மற்றும் ஆணைக்குழுக்களின் இயக்குனர்கள்
திரு. நாதன் சுரேஸ்
செல்வி. ஜே.கிறுசாந்தா குருஸ்
அருட்சகோதரி. எம். நிரோசா அ.கா.
அருட்தந்தை. இயேசு ரமேஸ் அ.ம.தி
கணக்காய்வாளர்: திரு. பொனி செபஸ்தியன்
திருமதி. ஆர். வேர்ஜின்

இம் மாநாட்டினை மறை மாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு ஒழுங்கு படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

திரு.ச. சந்திரகுமார்
செயலாளர்
மறை மாவட்ட மேய்ப்புபணிப் பேரவை,
திருகோணமலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலையூற்றில் பொன் விழா காணும் தூய வின்சன் டி போல் 1967 – 2017

திருகோணமலையில் பாலையூற்று தூய வின்சன் டி போல் சபையானது இவ்வருடம் பொன்விழாவைக் கொண்டாடுகிறது. இதன் ஆரம்ப நிகழ்வாக 2017 புதுவருட நள்ளிரவு திருப்பலியின் போது சபை ஆரம்பிக்கப்பட்டதன் 50வது வருட ஜூபிலி பிரகடனப் படுத்தப்படுகிறது.

கத்தோலிக்த் திருச்சபையில் பிறரன்புப் பணியில் ஆர்வம் கொண்ட அங்கத்தவர்களின் அர்ப்பணத்தோடும், பங்குத்தந்தையர்களின் ஆன்மீக வழிகாட்டுதலோடும் சுயமாக செயற்படுகின்ற பொதுநிலையினர் சபையாகிய இத் தருமசபை ஸ்தாபிக்கப்பட்டு 184வது ஆண்டில் கால் பதித்திருக்கும் வேளையில் பாலையூற்று பங்கு மகிழ்ச்சி பிரவாகத்தில் பூரித்து நிற்கிறது.

பாலையூற்றில் தூய வின்சன் டி போல் சபை 1967ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1965ல் பாலையூற்று தனிப்பங்காகிய நிலையில் பங்குப் பணிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட முதல் பங்குக் குருவாகிய அருட்பணி சைமன் பெர்னான்டோ அடிகளாரது அனுமதியுடன் திருகோணமலை தூய மரியன்னை பேராலயப் பங்கினைச் சேர்ந்த சகோ. பெனடிக்ட் எனும் ஆசிரியர் ஒருவர் மேற்கொண்ட முயற்சியே பாலையூற்றில் அன்பின் சேவை மலர வளர மிளிரவும் அடிகோலியது.

'ஏழைகளுக்கு உதவுதல்' என்ற பிரதான நோக்கம் கொண்டு 1833ம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் நகரில் பிரெட்றிக் ஓசானம் எனும் இளைஞனால் ஸ்தாபிக்கப்பட்ட இச் சபையின் ஆரம்ப கால அடிச் சுவட்டைப் பின்பற்றியதாக பாலையூற்றில் இரக்கச்சிந்தை கொண்டவர்களாய் முதலாவது நிருவாகத்தில் தம்மை இணைத்துக் கொண்ட சகோதரர்களான G. அம்புறோஸ், டெஸ்மன்ட் குமாரசுவாமி, அன்ரன் யோன்சன், S.O. ஞானபிரகாசம், R.C. யோசப், உபால்டோ பெரேரா ஆகியோர் ஞாயிறு தினங்களில் வீடு வீடாக சென்று பணம், அரிசி போன்றவற்றை மக்களிடம் இருந்து பெற்று இல்லாதவருக்கு உதவும் தருமப் பணியை ஆரம்பித்தனர்.

அத்துடன் கரோல் நிகழ்ச்சி, என்பிலப் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு அதன் மூலம் நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தில் வறியவர்களும் மகிழ்ந்துண்டு களிப்புற புத்தாடைகள் உணவுப் பொட்டலங்களையும் பகிர்ந்தளித்து வந்தனர்.

1972 ~ 1983 காலப்பகுதிகளில் ஆண் பெண் எனும் இரு பால் அங்கத்தவர்களும் தமது உடலை வருத்தி கடினமான காரிய செயற்பாட்டின் மூலம் நிதிசேகரிக்கும் பணியை முன்னெடுத்தனர். குறிப்பாக விறகு வெட்டி விற்பனை செய்தல், யாத்திரிகர் நலன் கருதி கழிவறைக் குழிகள் வெட்டி மலசல கூடம் அமைத்தல், ஆலயத் திருவிழாவையொட்டி சிற்றுண்டிச்சாலை நடத்துதல் , திருமறை பொருள் விற்பனை செய்தல் எனும் பணிகளால் வறிய குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகள்பல நிறைவேற்றப்பட பெரும் வாய்ப்பாகியது.

ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வந்த வறிய குடும்பங்களுக்கு கிடுகுகள் அன்பளிப்பு செய்ததோடு பலரது வீட்டுக் கூரைகளை தாமாகவே வேய்ந்து கொடுத்த பணி பலரும் மெச்சக் கூடிய செயல்பாடாக அமைந்திருந்தது. மேலும் இளவயதினருக்கு தையல் பயிற்சி நிலையமும், மாணவர்களுக்கு இலவச மாலைநேர வகுப்புகளும், வருமானம் குறைந்தோருக்கு சுய தொழில் மேம்பாட்டுக்கான உதவிகளும் வழங்கிய பணிகளென அன்புச் சேவைகள் தொடர்ந்தன.

இதன் பின்னர் வந்த நிருவாகத்தினரும் தமது வசதிவாய்புக்கேற்ப பல வழிகளில் நிதி வசூலிப்பு செய்தனர். இணைக்கப்பட்டநாடுகள், தேசிய சபை மற்றும், சபையின் நிதி நன்கொடையாளர் வழங்கும் நிதியினைக் கொண்டு மாணவர் புலமைப் பரிசில் நிதி உதவி, இயற்கை அனர்த்த பாதிப்பு நிவாரண நிதி உதவி, சுனாமி வீட்டுத் திட்டம் இனக்கலவரம் யுத்தகால அகதிகள் இடம் பெயர்ந்தோருக்கு நிதி, மற்றும் நிவாரணம் பொருட்கள் பகிர்ந்தளிப்பு, இரக்கத்தின் ஆண்டு வீட்டுத் திட்டம் என்பவற்றைச் செயல்படுத்தி ஆன்மீக இயக்குனர்கள், பங்கு மக்களது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டனர்.

வீடுகளில் வைத்திய சாலைகளில் நோயாளர்களைத் தரிசித்தல், சத்துணவு, மருந்துப் பொருட்கள் கையளித்தல், வயோதிபர் மட முதியோரை சந்தித்து மகிழ்வித்தல் வசதியற்றவர்களது மரணச்சடங்குகளுக்கு உதவுதல் என்ற பணிகள் பல இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு தருமம் பெற்று தருமம் அளிக்கும் உன்னத பணியில் ஈடுபடுகின்ற தூய வின்சன் டி போல் சபையின் பாலையூற்று லூர்து அன்னை ஆலோசனை சபையானது தமது 50 வருட ஜூபிலி விழாவினையொட்டி ஐம்பது வறிய குடும்பங்களுக்கு விசேட உதவிகள் வழங்குதல், பங்கில் செயற்படுகின்ற ஆலோசனை சபைகள் மற்றும் மறைமாவட்ட சபையுடனான ஒன்று கூடல் பாதுகாவலர் தினத்துடன் (புரட்டாதி 27) ஜூபிலி விழாவினைக் கொண்டாடுமுகமாக சிறப்புத் திருப்பலியும் கலை நிகழ்வுகளுடன் அங்கத்தவர் கௌரவிப்புத் திருப்பலியும் கலை நிகழ்வுகளுடன் அங்கத்தவர் கௌரவிப்பு, சிறப்பு மலர் வெளியீடு எனப் பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இறுதியாக இந்த ஐம்பது வருட காலத்தில் அளப்பரிய சேவையாற்றி உள்ளோம் எனப் பறைசாற்றுவது முக்கியமல்ல மாறாக ஒரு சபையின் வளர்ச்சி என்பது அதன் அங்கத்தவர்களின் ஒழுக்கத்திலும், பிரமாணிக்கத்திலும், அர்ப்பணிப்பிலும், தியாகத்திலும், பிரதிபலன் பாராத நற்செயல்களிலும் தங்கியுள்ளது என்பதை உணர்ந்து கொண்டு தலைமைத்துவப் பண்பிற்கு வரைவிலக்கணம் தந்த ஸ்தாபகர் அருளாளர் பிரெட்றிக் ஓசானத்தினதும் தாழ்ச்சி என்னும் பண்பு நிறைந்தவரான சபையின் பாதுகாவலர் தூய வின்சன் டி போலின் வழியிலும் இயேசு வாழ்ந்து காட்டிய அன்பின் மாதிரிகைகளைப் பின்பற்றியவர்களாக வின்செனசியன்கள் அனைவரும் தன்னலம் கருதாது அன்பின் சேவையை தொடர்வது சிறப்புடையதாகும்.

ஆக்கம்:
G. அல்பேட் - பாலையூற்று

## கிறிஸ்மஸ் துணுக்குகள்

**கிறிஸ்துமஸ்**

கிறிஸ்து + மஸ் = Christ + Mass என்ற சொல்லுக்கு கிறிஸ்துவின் ஆராதனை என்று பொருள். ஆங்கில வழக்கில் கிறிஸ்துவின் மாஸ் என்றழைக்கப்பட்டது. மாஸ் என்பது திருப்பலி என்பது நாம் அறிந்ததே. அது மருவி உருவானது தான் கிறிஸ்துமஸ். கிரேக்க மொழியில் எக்ஸ்மாஸ் என்றழைக்கின்றனர். **('ஓ' என்பதன் அர்த்தம் ஊர். இதன்கிறிஸ்வின் பெயரைக் குறிக்கிறது.)**

**கிறிஸ்துமஸ் மரம்**



கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் பழக்கம் தோன்றுவதற்கு ஸ்காண்டி நேவியர்கள் தான் காரணம். இவர்கள் கிறிஸ்துவை வழிபடுவதற்கு முன்னர் மரங்கள வழிபட்டனர். அவர்கள் மனம்மாறிய பின்பு பண்டிகைத் தினங்களில் மரங்களை வழிபட்டனர் அவர்கள் மனம்மாறிய பின்பு பண்டிகைத் தினங்களில் மரங்களை அலங்கரித்தனர். 1841 ஆம் ஆண்டு இங்கிலாந்து இளவரசர் ஆல்பர்ட் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மரத்தை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தினார். அது முதல் இது உலகெங்கும் வேகமாக பரவியது. கிறிஸ்மஸ் மரம் என்பதற்கு பசுமை மாறாத மரம் என்று பொருள். சீர்திருத்தவாதியான மார்டின் லூத்தர் என்பவரால் 16 ஆம் நூற்றாண்டில் ஊசி இலை மரமானது அலங்கரிக்கப்பட்டு கிறிஸ்துமஸ் மரம் உருவாக்கப்பட்டது என்று குறிப்புகள் சொல்லுகின்றன.

**குடில்**



1223 ஆம் ஆண்டு கிரேச்சியா எனும் இடத்தில் உள்ள அசிசி நகரில் புனித அசிசியாரால் முதன் முதலில் கிறிஸ்துமஸ் குடில் உருவாக்கப்பட்டது. புனித நிக்கோலாஸ் சாண்டாகிளாஸ் ஆனார். அவரை ஒரு குண்டான சிகப்புத் தொப்பியுடன் கிறிஸ்துமஸ் தாத்தா என்று உருகொடுத்தவர், 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாமஸ்மூர் ஆவார்.



**கிறிஸ்மஸ் தாத்தா**

கிறிஸ்மஸ் தாத்தா சாண்டாகிளாஸ் என்று அழைக்கப்படும் புனித நிக்கோலாஸ் துருக்கி நாட்டில் பாதரா என்ற ஊரில் கி.பி 352 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் ஒரு ஆயர். கிறிஸ்துமஸ் தினத்தன்று குழந்தைகளுக்கு அவர்கள் நினைக்காத பரிசுப் பொருட்களைக் கொடுத்து இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்துவார். அது முதல் கிறிஸ்துமஸ்தாத்தா வேடமிட்டு குழந்தைகளை மகிழ்விக்கு பழக்கம் உண்டானது. புனித நிக்கோலாஸ் இறந்த நாளான டிசம்பர் 6 ம் திகதி கிறிஸ்மஸ் தாத்தா தினம் என்றழைக்கப்படுகின்றது.

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் ~ 2500.00 |
| | 1/2 பக்கம் ~ 5000.00 |
| கலர் | 1/4 பக்கம் ~ 3750.00 |
| | 1/2 பக்கம் ~ 7500.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/ ஸ்ரீ கோணலிங்க மகாவித்தியாலய ஒளிவிழா - 2016








# மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான ஒளிவிழா


















# திருகோணமலை மறைமாவட்டத்தின் நத்தர் விழா ~ 2016







# ஆசிய ஆயர் பேரவையின் 11வது அமர்வு









**நீதிமான்களே ஆண்டவரில் களி கூறுங்கள் (தி.பா 33:1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org